1986 நவம்பர் 21]

கோரிக்கை.	(ரூபாய் ஆயிரத்தில்).
சி. கடன்கள், முன் பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.	
59 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்	4,57,85
பெரு மொத்தம் ..	56,26,96

8. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு 1986,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

" தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார் ".

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1980–81.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"1980–81-ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையின் முன் மொழிய ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது."

MESSAGE

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sunder Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for Excess Expenditure for the year 1980–81."